**CENTRE FOR MONITORING ELECTION VIOLENCE**
මැතිවරණ ප්‍රචණ්ඩත්ව නිරීක්ෂණ මධ්‍යස්ථානය
தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம்
No 6/5, Layards Road, Colombo 05, **Tel:** +094-11 3010664
**Fax**: +094-11 2505228 **E-mail**: cmev@cpalanka.org **Web**: www.cmev.org

திரு.மஹிந்த தேசபிரிய, தவிசாளர், ஜனாதிபதி சட்டத்தரணி, திரு.நலீன் அபேசேகர, உறுப்பினர்- தேர்தல்கள் ஆணைக்குழு, பேராசிரியர் எஸ்.ரத்னஜீவன் எச். ஊல், உறுப்பினர்- தேர்தல்கள் ஆணைக்குழு

இலங்கை தேர்தல்கள் ஆணைக்குழு,

தேர்தல்கள் செயலகம்,

இராஜகிரிய

2018-01-20

<u>வெறுப்பூட்டுகின்ற வார்த்தைப் பிரயோகங்களினால் உள்ளூர் அதிகார சபைத் தேர்தலில் போட்டியிடுகின்ற பெண் வேட்பாளர்களுக்கு அசௌகரியத்தினையும் அபகீர்த்தியினையும் ஏற்படுத்துவதன் மூலமாக தேர்தல் செயன்முறைக்கு இடையூறு விளைவித்தல்</u>

நடைபெறபோகின்ற உள்ளூர் அதிகார சபைத் தேர்தலினை சுதந்திரமானதும் நியாயமானதுமான முறையில் நடத்துவதன் பொருட்டு உங்களுடைய முயற்சியினூடாக தேர்தல்கள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்டுள்ள பல்வேறு நடவடிக்கைகளுக்காக தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்தின் சார்பில் எங்களுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதேவேளை பெண் வேட்பாளர்களின் அரசியல் ஈடுபாட்டினைக் கண்டனம் செய்கின்ற வகையிலான வெறுக்கத்தக்க பேச்சுக்களை உள்ளடக்கிய காணொளிப்பதிவுகள் சமூக ஊடகங்களில் வலம் வருவதனை தேர்தல்கள் ஆணைக்குழுவின் மேலான கவனத்திற்கு கொண்டு வருவதற்கு விரும்புகின்றோம்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் மின்னஞ்சல் முகவரிக்கு நாங்கள் அனுப்பியுள்ள அக் காணொளிப்பதிவிலே குறிப்பிடப்பட்டிருப்பதனைப் போன்று, நியாஸ் என்ற பெயருடைய மௌலவி (மதகுரு) பெண்களுடைய அரசியல் பங்குபற்றுகையினை கடுமையான மற்றும் அவதூறான வார்த்தைகளினால் விமர்சித்துப் பேசியுள்ளார்.

மேலும் குறிப்பிட்ட மதகுரு உள்ளூர் அதிகார சபைத் தேர்தலுக்காகப் போட்டியிடுகின்ற பெண் வேட்பாளர்களினுடைய கௌரவத்தினை அழிக்கும் வகையில் உரையாற்றியுள்ளார். இம்மதகுருவினுடைய பிரதான எண்ணம் பெண்களைத் தேர்தலில் போட்டியிடச் செய்யவிடாது தடுக்க வேண்டும் என்பதே ஆகும். குறிப்பாக இவர் வடக்கு, கிழக்கு மற்றும் புத்தளம் மாவட்டத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தி தேர்தலில் போட்டியிடுகின்ற பெண்களை வார்த்தைகளினால் தொடர்ச்சியாக நிந்தித்துள்ளார்.

இத்தகைய செயற்பாட்டின் அபாயகரமான விளைவாக, குறிப்பிட்ட பிரதேசங்களிலுள்ள வாக்காளர்கள் இத்தகைய கூற்றுக்களின் செல்வாக்கிற்கு உட்பட்டு பெண் வேட்பாளர்களை நிராகரிக்கும் ஒரு நிலை ஏற்படலாம். இம்மதகுரு இஸ்லாம் பிரிவொன்றான தௌஹீட் ஜமாத் என்ற பிரிவின் ஒரு உறுப்பினரென தன்னை அடையாளப்படுத்துகின்றார். இவருடைய இத்தகையதான குற்றஞ்சாட்டுகின்ற நடத்தையானது நடைபெறப்போகின்ற உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்களில் பெண் வேட்பாளர்களுக்கு களம் அமைத்துக் கொடுப்பதற்கு மேற்கொள்கின்ற முயற்சிக்கான பாரியத் தடையாக அமையும்.

எவ்வாறெனினும் இத்தகைய காணொளிப்பதிவுகளை குறிப்பிட்ட பிரதேசங்களில் போட்டியிடுகின்ற வேறுபட்ட அரசியற் கட்சிகளின் வேட்பாளர்கள் தங்களுடைய அரசியல் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்திக்கொள்கின்றார்கள் என எங்களுடைய நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட கண்காணிப்பின் மூலம் அறிய முடிந்தது.

இக்காணொளிப்பதிவுகள் மூலமாக ஏற்படுத்தப்பட்ட தூண்டுதல்களின் விளைவாக நேற்றிரவு குறிப்பிட்ட பிரதேசத்திலுள்ள பெண் வேட்பாளர் ஒருவருடைய அலுவலகமொன்று தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. ஆகவே அப்பிரதேசத்திலுள்ள ஏனைய பெண் வேட்பாளர்கள் இத்தகு அச்சுறுத்தல் மிகு சூழ்நிலை தொடர்பிலான அவர்களுடைய விசனங்களை எமக்குத் தெரிவித்துள்ளனர். (இவ்விடயம் தொடர்பான மற்றுமொரு முறைப்பாட்டினை அனுப்புவதற்கான ஆயத்தங்களை எம்முடைய நிறுவனம் மேற்கொண்டு வருகின்றது)

இவ்விடயம் தொடர்பில் நீங்கள் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்வீர்களாயிருப்பின் நாங்கள் மிகவும் நன்றியுள்ளவர்களாக இருப்போம்.

நன்றி

கலாநிதி.பா.சரவணமுத்து,

இணை அழைப்பாளர்

தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம்

---

பிரதிகள்: திரு. பூஜித் ஜயசுந்தர, பொலிஸ்மா அதிபர், இலங்கை பொலிஸ், பொலிஸ் தலைமையகம், கொழும்பு 01

திரு. சி. டி. விக்கிரமரத்ன, சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் (நிர்வாகம் மற்றும் தேர்தல்கள்), இலங்கை பொலிஸ்

திரு. பி. எம். எஸ். ஐ பண்டார, உதவி தேர்தல்கள் ஆணையாளர், மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம், புத்தளம்